வீட்டில் அவசியம்
இருக்கவேண்டியது
தேமோஸ் ∴பிளாஸ்க்
THERMOS
உங்களுக்கும் தேவை
மலிவு விலையில் பெற
இன்றே நாடுங்கள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 புரட்டாதி 12 ஷவ்வா: 24 இதழ்: 229
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-9-78

இந்த "நேரம்"
எந்த நாளும் வாழும்
CITIZEN
கைக்கடிகாரங்கள்
° புதிய டிசைன்கள்
° அழகிய அமைப்பு
பல வர்ணங்களில் கிடைக்கின்றன
நேரடிஇறக்குமதியாளர்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

# கலாபதி பிணையில் விடுதலை!

## மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

[கொழும்பு]

**சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பாலசுப்பிரமணியம் கலாபதி; இரண்டாயிரத்து ஐநூறு ரூபா சரீரப் பிணையில் நேற்று விடுதலைசெய்யப்பட்டார்.**

கலாபதி பாலசுப்பிரமணியத்தை ரூபா 2,500 சரீரப்பிணையில் விடுதலை செய்யுமாறு, யாழ்ப்பாணம் நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. பிணையில் விடுவிக்கப்படும் கலாபதி பாலசுப்பிரமணியம், இரண்டு வாரங்களுக்கு ஒருதடவை, வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையத்திற்குச் சென்று சமூகமளிக்கவேண்டுமென்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கலாபதி பாலசுப்பிரமணியம் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக இவ்வருடம் மே மாதம் 13ம் திகதி வல்வெட்டித்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கலாபதியை பிணையில் விடுவிக்குமாறு கோரி கடந்த ஜுலை மாதம் 20ம் திகதி உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது இந்த மனுவை கலாபதியின் சகோதரர் ஸ்ரீபதி தாக்கல் செய்திருந்தார்.

இந்த அப்பீல் மனுமீது நேற்று, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

''யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேகநபர் அடையாளம்காட்டப்படவில்லை. சந்தேகநபர் பிணையில் விடுதலைசெய்யப்படுவதை நான் ஆட்சேபிக்கவில்லை'' என்று பதில் வழக்குத்தொடுநர் திரு. எஸ். சிவராஜா நேற்றைய விசாரணையில் தெரிவித்ததைத் தொடர்ந்து கலாபதி பாலசுப்பிரமணியத்தை 2,500 ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்வதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

நேற்றைய விசாரணை, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் திரு. ஜே. எவ். ஏ சோஸா, திரு. பிரிந்தா ரணசிங்கா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

சந்தேகநபர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. வி எஸ் ஏ. புள்ளநாயகம் ஆஜரானர்.

### பத்மநாதன் கொலை

யாழ்ப்பாணம் குற்றப் புலனாய்வுத்துறைப் பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் திரு. கே. பத்மநாதன் கடந்த மே மாதம் எட்டாந் திகதி இரவு தமது இல்லத்தில் சுட்டுக்கொலைசெய்யப்பட்டார். இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக சந்தேகத்தின் மீது வலவெட்டித்துறையைச் சேர்ந்த திரு. பாலசுப்பிரமணியம் கலாபதி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

### பிணை மனு

கைது செய்யப்பட்ட கலாபதியை பிணையில் விடுதலைசெய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் இவ்வருடம் ஜுலை மாதம் 20ம் திகதி மனுவொன்று தாக்கல்செய்யப்பட்டது.

சட்டமா அதிபருக்கும், யாழ்ப்பாணம் தலைமை அலுவலக பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கும் எதிராக இந்த மனு தாக்கல்செய்யப்பட்டது,

கலாபதியின் சார்பில் சட்டத்தரணி திரு. சி. விவேகானந்தன் மனுவைத் தாக்கல்செய்திருந்தார். கலாபதியினதும் சட்டத்தரணி திரு. எஸ். கே. மனோகரனதும் சத்தியக்கடதாசிகள் மனுவில் இணைக்கப்பட்டிருந்தன.

### பிணை மனு விபரங்கள்

இந்தப் பிணைமனுவில்-

''பாலசுப்பிரமணியம் கலாபதி 13-5-1978ல் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பின்னர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

''1978 மே மாதம் 13ந் திகதி கைதுசெய்யப்பட்டது முதல் அதே மாதம் 24ந் திகதி யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டது வரை, பண்ணை, கிங்ஸ் ஹவுஸ், யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய மேல்மாடி, யாழ். கோட்டையின் உட்புறத்திலுள்ள பொலிஸாரின் பொழுதுபோக்கு அறை ஆகிய இடங்களில் பொலிஸார் கலாபதியை வைத்திருந்தனர்.

''உயர் நீதிமன்ற ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்த காரணத்தால் இன்ஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச் சமுதாயத்தின் சார்பாக

## விஜயவீராவிடம் வண்ணை வருத்தம் தெரிவித்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரில், சில தினங்களுக்கு முன் நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின்கூட்டத்தில், யாரோ ஒருவர் கல் வீசியதில் முன்னணியின் தலைவர் திரு. ரோகண விஜயவீராவுக்கு காயமேற்பட்டதற்காக நேற்றிரவு யாழ் திறந்தவெளி அரங்கில் நடந்த ஈ. வெ ரா. பெரியார் நூற்றாண்டுவிழாவில் பேசிய தமிழ் இளைஞர் பேரவைப் பிரமுகர் திரு. வண்ணை ஆனந்தன் கவலை தெரிவித்ததுடன், அன்று நடந்த சம்பவத்திற்காகத் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பாக திரு. ரோகண விஜயவீராவிடம் மன்னிப்பும் கோருவதாகத் தெரிவித்தார்.

திரு, ரோகண விஜயவீராவுடன் தாம் சிறையில் கழித்த நிகழ்ச்சிகளையும் வண்ணை ஆனந்தன் நினைவுபடுத்திசிறையில் இரத்தம் கொடுத்தசம்பவத்தையும் எடுத்துக்கூறினர்.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்திலிருந்து யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், தங்கள் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு முதலிடம் கொடுக்காவிட்டால் ''றியல் இயக்கம் தொடங்கப் போவதாகவும் வண்ணை ஆனந்தன் அறிவித்தார்.

## "சமுதாயத்தைச் சீர்திருத்த துணிச்சல் வேண்டும்"

### யாழ். நகரில் வீரமணி

(யாழ்ப்பாணம்)

சாதி ஒழிப்பு, சமூகசீர்திருத்தம் ஆகியவற்றை அரசியலுடன் இணைக்கக்கூடாதென்றும் இந்தக் குறைபாடுகளை ஒழித்து சமுதாயத்தைச் சீர்திருத்துவதற்குப் பெரியார் ஈ. வெ. ரா. போன்று துணிச்சலுடன் செயல்படவேண்டுமென்றும் ஈ வே. ரா. பெரியாரின் சீடரும் திராவிடர் கழகத்தின் செயலாளருமான கடலூர் வீரமணி நேற்றுமாலை யாழ். திறந்தவெளி அரங்கில் திருக்குறள் முன்னணிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற பெரியார் ஈ. வெ. ரா. நூற்றாண்டுவிழாக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

பதவியையோ, பட்டத்தையோ எதிர்பார்த்து சமுதாயத்தைச் சீர்திருத்தமுடியாதென்றும் சமுதாய சீர்திருத்தத்தின் பின்னரே மக்கள் விடுதலைபெறமுடியுமென்றும் திரு வீரமணி கூறினர்.

அரசியல்வாதிகள் மீண்டும் பதவிக்குவருவது பற்றித்தான் சிந்திப்பார்கள். அதைவிடுத்து அடுத்த சந்ததியைப்பற்றித் தான் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்றும் திரு. வீரமணி கூறினர்.

## கடலூர் வீரமணிக்கு மகத்தான வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்த பெரியார் ஈ. வே. ரா.வின் தொண்டரும், திராவிடர் கழகப் பொதுச் செயலாளருமான கடலூர் கி. வீரமணிக்கு யாழ். ரயில்நிலையத்தில் வைத்து, தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும், பொதுமக்களும் மலர்மாலை சூட்டி மகத்தான வரவேற்பளித்தனர்.

வரவேற்பில் யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், திருக்குறள் முன்னணிக்கழக தலைவர் இரா. பற்குணம், வண்ணை ஆனந்தன், ஆ. பொ. செல்லையா, செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனைக்கு சென்று தந்தை செல்வாவினதும், அறிஞர் அண்ணாவினதும் உருவப் படங்களுக்கு திரு. வீரமணி மலர்மாலைகள் அணிவித்து

[6ம் பக்கம் பார்க்க]

## பகிஷ்கரிப்பு கோரிக்கை:

## மாணவர்கள் வரவு குறைவாகவிருந்தது

(யாழ்ப்பாணம்)

திருமலை இந்துக்கல்லூரி விவகாரம் தொடர்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளை 27-ம் திகதி பகிஷ்கரிக்கும்படி ஈழ மாணவர் மன்றம் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து நேற்று யாழ்ப்பாண நகரிலுள்ள கல்லூரிகள் வழமையாக நடைபெற்றபோதிலும் மாணவர்களது வரவு பெருமளவில் குறைவாகவே காணப்பட்டது.

தங்கள்கல்லூரியில் குறைந்த வரவு காணப்பட்டது என்று கல்லூரியொன்றின் அதிபர் தெரிவித்தார்.

நேற்று அதிகாலையில் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் யாரேனும் ஈடுபடுவர் என்ற சந்தேகத்தில் பொலிஸார் பாடசாலைகளின் சுற்றுடல்களில் கண்காணிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்

யாழ். வளாகத்தில் மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லவில்லை. நேற்றுமாலை நகரின் முக்கியசந்திகளில் ஆயுதந்தாங்கிய பொலிஸார் காவலில் நிறுத்தப்பட்டிருந்தனர். அசம்பாவிதங்கள் இடம்பெற்றதாகத் தகவல் கிடைக்கவில்லை. (கூ-கெ)

## தொழில் நுட்ப நிறுவனத்தில்...

(கோண்டாவில் நிருபர்)

கொக்குவில் தொழில் நுட்ப நிறுவனம் நேற்று வெறிச்சோடிக் கிடந்தது

சகல பகல்நேரப் பயிற்சிநெறி மாணவர்களும் வகுப்புகளுக்கு வரவில்லை. குறிப்பாக வர்த்தகத்துறையைச் சேர்ந்த மாணவர்கள் முழுமையாகவே வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

தொழிற்பயிற்சி நெறிகளை மேறகொள்கின்ற ஒருசில மாணவர்கள் மட்டும் நிறுவனத்திற்கு வந்திருந்தனர். அவர்களும் ஒழுங்காக வகுப்புகளுக்குச் செல்லவில்லை. நிறுவனத்தின் முகப்புக் கதவு ஒன்று சாத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது.

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

# பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 11-10-78க்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

### 1. நுகர்ச்சி முகாமையாளர் தரம் 3

கல்வித் தகைமைகள்-

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. கூட்டுறவு வேலையாளர் (உயர்தர) தராதரப் பத்திரமும் ஒரு வருட கால அனுபவமும் அல்லது
3. கூட்டுறவு வேலையாளர் (சாதாரணதர) தராதரப் பத்திரமும் மூன்று வருட கால அனுபவமும்.

வயது- 28 வயதுக்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் - 300 — 500 ........................ 12·50×10, 15×5

### 2. பொது லிகிதர் தரம் 1

கல்வித் தகைமைகள் -

1. கூட்டுறவுப் பயிற்சி பெற்ற பட்டதாரி அல்லது
2. பொது எழுதுநர் தரத்திலுள்ள தரம் 2 பதவியில் ஐந்து வருட கால அனுபவம்.

வயது- 28 வயதிற்குக் குறையாதவராய் இருத்தல் வேண்டும்.

சம்பளம் - 300 — 490 ........................ 10×10, 15×6

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு பாஷைகளிலும் கடிதப் போக்குவரத்து செய்யக்கூடிய தகுதி உடையோருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தலைவர்,
நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

27-9-78. 0442

---

## விளம்பரம்

## பருத்தித்துறை
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டுள்ளது)
பருத்தித்துறை.

# பதவி வெற்றிடம்

### கணக்காளர் தரம் 111

மேற் குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது:

23க்கும் 50க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும், தற்போது கூட்டுறவு சேவையிலுள்ளோருக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது.

வேதனம்:

ரூபா 300/- — ரூபா 500/- ........................ ரூபா 12·50×10, ரூ. 15·00×5 (தெரிவு செய்யப்பட்டவரின் கல்வித் தகைமை, அனுபவம் முதலியவற்றிற்கேற்ப, இந்தச் சம்பள எல்லைக்குள் தகுந்த சம்பளம் வழங்கப்படும்)

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும்

**கடைசித் திகதி:**

பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்களை 10-10-78-ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம், மற்றும் தேவையான தராதரங்கள், தகைமைகள் பற்றிய விபரங்கள் யாவும் பெறுவதற்காக கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ வந்து பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவேண்டின் முத்திரை ஒட்டப்பட்ட சொந்த முகவரியிடப்பட்ட தபால் உறை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் ''தலைவர், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''கணக்காளர் தரம் 111 பதவிக்கான விண்ணப்பம்'' என எழுதப்படல் வேண்டும்.

எமது 24-4-78-ந் திகதி விளம்பரத்திற்கு இசைய கணக்காளர் தரம் 111 பதவிக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் மீண்டும் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

தலைவர்,
பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பருத்தித்துறை.

திகதி: 25-09-78. 0435

---

## ஏலவிற்பனை
### மாநகரசபை
### யாழ்ப்பாணம்

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான சுமார் இரண்டாயிரத்து தொழாயிரத்து ஐம்பது (2950) தென்னங் கிடுகுகள் 27-10-78 மு.ப. 10-00 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் கலியாண மண்டபவளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சித்தி பெறும் கேள்விக்காரர்கள் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி கிடுகுகளை அப்புறப்படுத்தவேண்டும்.

க. சிவஞானம்
யாழ். மாநகர ஆணையாளர்.
யாழ். மாநகர அலுவலகம்
25. 9. 78. 0143

---

### சாவகச்சேரி
### நகராட்சி மன்றம்
## கேள்விப் பத்திர விளம்பரம்

கீழ்க்காணும் வேலைகட்கும், கொள்வனவுக்கும் இந்நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. பொது நூலகத்திற்கும், சுற்றுமதிலுக்கும் மை பூசுதல்.
2. பொது நூலகத்திற்கு இணைப்புகள், கூரைத் திருத்தங்கள் செய்தல்.
3. தேங்காய் விற்பனை நிலையத் தளத்திற்கு சீமெந் திடுதல்.
4. மீசாலையில் பொதுக் கிணறு தோண்டி அமைத்தல்.
5. குசவமடம் பொதுக் கிணறு திருத்தம் செய்தல்.
6. சபாமண்டப மேடைகள படங்கள் பொலிஷ் செய்தல்.
7. 5-ம் வட்டாரத்திலுள்ள ஆனை காட்டைக் குளம் ஆழமாக்கி துப்பரவு செய்தல்.
8. மகிழங்கேணி குடியேற்றத் திட்டத்திலுள்ள கிணற்றுக்குத் துலாத் தாங்கித் தூண் அமைத்தல்.
9. தனங்கிளப்பு பொது மயானத்திற்கு தெற்கு எல்லைக்கு மதில் அமைத்தல்.
10. பொதுச் சந்தையிலுள்ள தகர மடுவங்களைபிடுங்கி மாற்றி அமைத்தல்.
11. பொதுச் சந்தையின் தென்புறத்திலுள்ள ஐந்து கடைகளைக் கொள்வனவு செய்து அகற்றுதல்.

கேள்விப் பத்திரங்கள் 5-10-78 ந் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் இந்நகர சபை அலுவலகத்தில் கேள்வி ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- வைப்புப் பணமாகவும் கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றுக்கும் ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் காகித வுறைக்குள் வைக்கப்பட்டு உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக இவ்வேலைக்குரிய பெயரை எழுதி, விசேட ஆணையாளர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு ஒக்டோபர் மாதம் 9ம் திகதி முற்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபையின் சபா மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடப்பட வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இதைப்பற்றிய விதிகளும் விபரங்களும் இன்னும் அறிய விரும்பின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி,
நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
26-9-78. 0437

---

## இடைக்காடு கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி
(யாழ்ப்பாணம்)

இடைக்காடு சனசமூகநிலைய ஆதரவில் இன்று மாலை 7 மணிக்கு மேற்படி நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடைபெறும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பின்வரும் விளையாட்டுக்கழகங்கள் மோதுகின்றன.

ஆறுவீரர் கலந்துகொள்ளும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 'ஏ' பிரிவு ஊர்காவற்றுறை காந்திஜிசன சமூக நிலையம் 'ஏ' பிரிவு, வல்வை திருவில் விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவு, ஊர்காவற்றுறை காந்திஜி சன சமூக நிலையம் 'பி' பிரிவு ஆகியனமோதுகின்றன.

நாலுபேர் கலந்துகொள்ளும் ஆட்டத்தில், கரணவாய் தெற்கு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் 'பி' பிரிவு, ஊர்காவற்றுறை ஆர். டி. எஸ். விளையாட்டுக்கழகம் 'ஏ' பிரிவு, புருட்பொறுக்கி இமையாணன் விளையாட்டுக்கழகம் 'ஏ' பிரிவு ஆவரங்கால் சரஸ்வதி சன சமூக நிலையம் 'ஏ' பிரிவு, கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழகம், அச்சுவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஆகியன மோதுகின்றன.

### முடிவுகள்

செவ்வாய்க்கிழமை 26ப் திகதி நடைபெற்ற கரபந்தாட்டப்போட்டிகளில் பின்வரும் சழகங்கள் வெற்றிபெற்றன.

ஆறுபேர் கலந்து கொண்ட ஆட்டப்: ஆவரங்கால் சரஸ்வதி விளையாட்டுக் கழசம் இடைக்காடு கலைமகள் விளையாட்டுக் சழகம்.

நாலுபேர் கலந்துகொண்ட ஆட்டம்: உடுப்பிட்டி இமையாணன் விளையாட்டுக் கழகம், இடைக்காடு சில்வர்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் சரஸ்வதி சன சமூக நிலையம்

23-ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டமுடிவுகள் வருமாறு:

ஆறுபேர் கலந்து கொண்ட ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமாரன் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக் கழகமும், தொண்டமானாறு தொண்டமான் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றன.

நாலுபேர் கலந்து கொண்ட ஆட்டத்தில் சிறுப்பிட்டி தெற்கு மக்கள் விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவும், கதிரிப்பாய் முரசொலி விளையாட்டு கழகம் 'ஏ' பிரிவும், குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றன. கூ)

---

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முட்டையிடும் 50 கோழிகளும், முட்டையிடும் பருவத்தை நெருங்கிய 50 கோழிகளும், 50 சேவல்களும் விற்பனைக்குண்டு. பி நவரத்தினம், நிருபர் 'ஈழநாடு' தபால் கந்தோருக்கருகாமை சங்கானை. 0441

திருநெல்வேலியில் தம்பசிட்டிப் பகுதியில் பத்துப் பரப்புத் தோட்டம் செய்யக்கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இரா புவனேந்திரன், பருத்தித்துறை வீதி, பூதர்மடம், கோப்பாய் வடக்கு. 0420

### தேவை

தகடு வெட்டுவதில் அனுபவமுள்ள ஒருவர் தேவை. நேரில் வரவும். அன்ரன்ஸ் றபர் சீல், வீட்டுப் பெயர் செய்யுமிடம், 91 மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். 0427

வேலைக்குப்பையன் தேவை. வீட்டு வேலைகளுடன் சமையல் வேலையும் செய்யக்கூடியதாக இருத்தல் அவசியம். அத்துடன் வேறு எங்கேயும் வேலை செய்திருந்தால் நற்சாட்சிப்பத்திரங்களுடன் தோற்றமளிக்கவும் சி எஸ். கே. மில்ஸ், 11, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 0430

---

## "மாற்றுப் பயிரிடுக"
(உடுப்பிட்டி)

'இப்பகுதிவிவசாயிகள் நெல் அறுவடை முடிந்ததும் வயல்களில் உழுந்து, பயறுபோன்ற பயிர்களைப் பயிரிடவேண்டும். இதன் மூலம் உபஉணவுப் பொருட்களால் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் உற்பத்தி செய்ய முடியும். தொடர்ந்து ஒரே இனப் பயிர்களைப் பயிரிடுவதால் தரையின் மண்வளம் கெடுவதுடன் விளைச்சலிலும் பாதிப்பு ஏற்படும்.'

இவ்வாறு புலோலி விவசாயப்போதனாசிரியர் திரு. ஆர். தில்லையம்பலம் நெல்லியடியில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் பேசுகையில் கேட்டுக் கொண்டார். (உ)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

MB/1214

1 பொன்னையா சித்தானந்தனும் பெண் 2 விஜேதினியும் உரும்பிராய் தெற்கு இவர்களில் 1ம் பேர் தனது தத்துவகாரன் சிறிநடராசா உரும்பிராய் மூலம்

---வழக்காளிகள்

எதிராக

விசுவநாதர் இரத்தினம் திருநெல்வேலி தெற்கு

—எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக்கோட்டின் MB/1214 இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4ம் திகதி புதன்கிழமை மு. ப. 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 3555/-ம் 10-5-76 தொடக்கம் 31-1-77 வரைக்கும் ரூபா 2000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்குப்வரை 9 வீத வட்டியும் கோட்டுச்செலவு 497 ரூபா 45 சதம் இத்தொகையில் ரூபா 1000/- கழித்து மிகுதிமுழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி நல்லூர்க்கோவிற்பற்று திருநெல்வேலி இறை ''செம்மண் கிடங்கு'' நில. பர. (4) நாலும் பயிர்வகைகளும் வடக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும், வழிவாய்க்காலும் இந்தப் பரப்பு நாலுக்கும் எல்லை கிழச்கு ரேட்டு, வடக்கு நடராசா பெண் நவமணியினுதனம், மேற்கு விஜிதசித்தப்பி வேலுப்பிள்ளையினுதனம், தெற்கு நாகமணி விசுவநாதரின் உரிமைக்காரரின் ஆதனம் இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்
14-7-78 0434

ஈழநாடு
The Eelanaadu

## புதிய பயிர்கள்

ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதும் நியாயமான விளைச்சலைக் கொடுக்கக்கூடியதுமான 'டில்வெயர்' என்னும் பதிய இன விதை உருளைக் கிழங்கு தற்போது விவசாய இலாகாவினால் வினியோகிக்கப் படுகிறதென்றும் இக் கிழங்கைப்பெற விரும்பும் விவசாயிகள் ஒரு கிழமைக்குள் தங்கள் பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் மூலம் கமத்தொழிற் சேவை அல்லது கூட்டுறவுச் சங்கத்தில் இதனைப் பெற்றுக் கொள்ளப் பதிவு செய்யலாமென்றும் யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க அதிபர் அறிவித்திருக்கிறார்.

வெங்காயம், மிளகாய்ச் செய்கையில் பாதிப்புற்று மாற்றுப் பயிர்ச் செய்கை பற்றி ஆலோசித்துவரும் விவசாயிகளுக்கு இது நல்லதொரு வாய்ப்பாகும்.

உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் அதிகம் நாட்டம் கொள்ள முடியாது. அதிக அளவில் உருளைக் கிழங்கை உற்பத்தி செய்தால் அவற்றை சந்தைப் படுத்துவதும் சுலபமல்ல. வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியாது; சேமித்தும் வைக்கமுடியாது சில தினங்களுக்குள்ளேயே கிழங்கு அழுகிவிடும்.

ஆனாலும் ஒருகுறிப்பிட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுத்து அந்தப்பகுதியில் உருளைக் கிழங்குசெய்கைபண்ணினால் அதன் விளைச்சல் எப்படியிருக்கும் என்பது பற்றி ஆலோசனை கூறி உதவியும் ஊக்கமும் அளிக்கவேண்டியது விவசாய இலாகாவின் கடமையாகும்.

இதேபோல் புதிய புதிய பயிர்களைப் புதிய புதிய இடங்களில் செய்கைபண்ணுவதால் விவசாயிகள் மாற்றுப் பயிர்ச் செய்கையினால் மண்ணின் வளத்தைப் பாதுகாப்பதற்குரிய நிலைமையையும் விவசாய இலாகா விவசாயிகளுக்கு எடுத்துக்காட்ட முடியும்.

எந்தெந்த மண்ணில் எந்தெந்தப் பயிர்களைச் செய்வதன்மூலம் விளைச்சல்கள் அதிகரிக்குமென்பதையும் இதனால் விவசாயிகள் எவ்வளவு ஆதாயம் பெற முடியுமென்பதையும் விவசாய இலாகா விளக்கவேண்டியது அவசியம்.

வடபகுதி விவசாயிகளைப் பொறுத்தவரையில் உப உணவுப் பொருள்களான வெங்காயம், மிளகாய், மற்றும் காசுப் பயிரான புகையிலை போன்றவற்றின் உற்பத்தியிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்தனர்.

இன்று மிளகாய், வெங்காய இறக்குமதியினால் பாதிப்படைந்துள்ள இந்த விவசாயிகளுக்குப் புதிய புதிய பயிர்களை அறிமுகப் படுத்துவதுடன் அவற்றின் மூலம் எவ்வளவு ஆதாயம் கிடைக்குமென்பதையும் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் விவசாய இலாகாவிடமே இன்று பெரிதும் தங்கியிருக்கிறது.

## பிரி.விமானப்படை தலைவர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பிரிட்டனின் விமானப் படைத்தலைவர் எயர் சீவ் மார்ஷல் சேர் மைக்கல் பீதம் அவரது பாரியார் லேடி பீதம் சகிதம் இலங்கை விமானப்படையின் விருந்தினராக இலங்கைக்கு உத்தியோகபூர்வ 2 நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார்.

எயர் சீவ் மார்ஷலுக்கு நிகழ்ச்சி நிரல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விமானநிலைய வரவேற்பை அடுத்து எயர் சீவ் மார்ஷல், பிரிட்டிஷ் தற்காப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் கே. எச். ஜே. ரெரேலைட்ஸ் சகிதம் கட்டுநாயகாவிலுள்ள இலங்கை விமானப்படைத் தளத்துக்கு விஜயம்செய்வார். கட்டுநாயகாவிலிருந்து அவர் இலங்கை விமானப்படை ஹெலிகொப்டரில் தியத்தலாவைக்குவிஜயம்செய்து, அங்கே விமானப்படையின் தரைப் போர்ப்பயிற்சி பிரிவினருடன் நண்பகல் உணவருந்துவார்.

அவர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா, தற்காப்பு பிரதியமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டியா ஆகியோரைச் சந்தித்து 'அலரிமாளிகை'யில் விருந்தினர் புத்தகத்தில் கையொப்பம் இடுவார். (இ)

## ஒருவழிப் பாதை மீறுவோர்மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சட்டத்துக்கு மாறாக யாழ். நகர் வீதிகளில் ஒருவழிப் பாதையைமீறும் சைக்கிள் காரர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக, நகரின் பிரதான வீதிகளில் ஒருவழிப்பாதையை மீறியவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பொலிஸ் வாகனங்களில்வந்த வீதிப்போக்குவரத்துப் பொலிசார் சட்டத்தை மீறியவர்களை உடனடியாகக்கைது செய்து சைக்கிள்களையும் கைப்பற்றினர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் யாழ். நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு அபராதம் செலுத்தினர். (கெ-உ)

## "ஆலயம் பேணுதலின் அவசியம்"

(மாவிட்டபுரம்)

எமது ஆலயங்களில் சைவாகம முறைப்படி கிரியைகள் இடம் பெற்றது சைவாலய முறைப்படி பேணிப் பாதுகாக்கப்படுமாயின் எம்மை துன்பங்கள் எதுவும் அணுகாது ஆலயங்கள் சிறப்பதால் தான் எமது வாழ்வும் சிறக்கும். ஆகவே ஆலயங்களை நாம் மிகவும் கவனமாகப் பேணவேண்டு

இவ்வாறு சைவப்பிரசாரகரான திரு. வை. நல்லையா மாவிட்டபுரம் வீணியவரை அம்பாள் ஆலயத்தின் உற்சவ இறுதிநாளில் கலந்து சமயச் சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ஆலயங்களில் ஒலிபெருக்கி மற்றும் ஆடம்பர சாதனங்கள் பாவிப்பது நிறுத்தப்பட வேண்டும் ஆலயங்கள் புனிதமாகப் பேணப்பட வேண்டும். கிரியைகள் ஒழுங்காக நடைபெற வேண்டும். அதன் மூலம் தான் எமது வாழ்வு சிறப்புறும் என்றார். (உ)

## மணிவாக்கு

இன்சொல் பேசு
அதுவும் அளந்தே பேசு
- சுவாமிசிவானந்தர்

"சமூகக் குறைபாடுகள் நிலவும்

# பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை"

## மானிப்பாய் எம். பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''பாடசாலைகளில் நடைபெறும் வைபவங்களில் சமூகக் குறைபாடுகள் அனுசரிக்கப் பட்டால், அப்பாடசாலைகளுக்கு எதுவித நிதி ஒதுக்கீடும் செய்யமாட்டோம். பாகுபாடு காட்டும் ஆசிரியர்களும் உடனடியாக இடமாற்றத்திற்குள்ளாவர்.''

இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி தருமலிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

குப்பிளான் விக்னேஸ்வர வித்தியாசாலைப் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் 48 வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில், திரு. தருமலிங்கம் எம். பி கலந்துகொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. க. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், திரு. தருமலிங்கம் எம். பி. தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''சில பாடசாலை வைபவங்கள் நடைபெறும்போது ஆசிரியர், மாணவர்களிடையே சமூக ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படுவதாக எமக்குப் பெற்றோர்களிடமிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன. இப்படியான பாடசாலைகளுக்கு நாம் அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு செய்யமாட்டோம். அதே நேரத்தில் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதுடன் இடமாற்றம் செய்வதாகவும் தீர்மானித்துள்ளோம். இது சம்பந்தமாகப் பாடசாலைகளுக்குச் சுற்றுநிருபங்கள் அனுப்பிவைத்துள்ளோம்.

### முன்னைய நிலை மீண்டும் வரலாம்

முந்திய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைப்போல இன்றைய ஆட்சியினரும், அந்தந்தத் தொகுதிக் கட்சி அமைப்பாளர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்போவதாக முடிவு செய்துள்ளதால், பாடசாலைகள், கிராம அபிவிருத்தி போன்ற செலவினங்களுக்கு எங்களால் எதுவும் செய்யமுடியாதுபோகலாம். இருந்தும் எம்மால், இயன்றவரை எமது பகுதி வளர்ச்சியடையச் சகல வழிகளிலும் முயற்சிப்போம். இப்பாடசாலையை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தவும், பாடசாலைக்கு மாடிக் கட்டிடம் ஒன்று அமைத்துத் தரவும் முயற்சி செய்வேன்.''

வடமாநிலக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ஆ. மகாலிங்கம் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (ஈ-அ)

"கலாநிதி தேர்வுக்காக

# பெரியார் பற்றிய ஆய்வுக்கு ஈழத்தவர்க்கு உதவுவோம்"

-- கடலூர் வீரமணி

(வெள்ளவத்தை)

தந்தை பெரியாரைப்பற்றி ஆய்வு நடத்தி 'கலாநிதி' தேர்வுக்காக ஆராய்ச்சிச் செய்யவிரும்பும் இலங்கையர்களுக்கு தமிழகத்தில் தங்கி ஆய்வு நடத்துவதற்கு வேண்டிய சகல உதவிகளை நாங்கள் செய்ய தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு தந்தை பெரியாரின் சீடரும் திராவிடர் கழகப் பொதுச் செயளாளருமான திரு. சி. வீரமணி 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:

'சுவீடன் நாட்டைச் சேர்ந்த செல்வி அனீட்டா டீல் என்டவர் பெரியாரின் இயக்கத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து 'பெரியார் ஈ. வெ. ராமசாமி என்ற பெயரில் ஆங்கிலத்தில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். கலிபோர்ணியா பல்கலைக் கழகத்தில் ஒருவர் பெரியாரைப் பற்றி ஆய்வு நடத்தி 'கலாநிதி' பட்டம் பெற்றுள்ளார்.

'இந்தியாவில் பல மாநிலங்களில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் பி. எச். டி. பட்டப் படிப்புக்காகப்பெரியாரை பற்றி ஆய்வுகளை பலர் விரும்பி ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு உதவுவதற்காகப் பெரியார் பகுத்தறிவு நூலகம், பெரியார் ஆய்வகம் ஆகியன தயாராக இருக்கின்றன.'

இவ்வாறு திரு. வீரமணி தெரிவித்தார். (அ)

## "உலக சிந்தனையாளராக பெரியார் எண்ணத்தக்கவர்"

(வெள்ளவத்தை)

'உலக சிந்தனையாளர்கள் வரிசையில் வைத்து எண்ணத் தகுந்தவர்கள் தந்தை பெரியார். சோவியத் ரஷ்யா போன்ற நாடுகளில் கூட பெரியாரின் சிந்தனை கருவூலங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்திருக்கும் திராவிடர் கழக பொதுச் செயலாளரும், 'விடுதலை' தினசரியின் ஆசிரியருமான திரு. கி. வீரமணி பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் பொழுது குறிப்பிட்டார்.

பகுத்தறிவாளர் சங்கச்சார்பில் திரு வேலணை வீரசிங்கம் ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளர் மாநாடு ஓட்டல் 'ஹொலிடே இன்'னில் நடைபெற்றது. பத்திரிகையாளர்களை வரவேற்று திரு. க. நவசோதி உரைநிகழ்த்தினார். மேலும் திரு. வீரமணி தெரிவித்ததாவது:

'ஒரு காலத்தில் பெரியாரின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இன்று முழுமனதுடன் பெரியாரின் கருத்துக்களை வரவேற்கின்றனர். இந்திய அரசு கூட அஞ்சல் தலை வெளியிட்டுக் கௌரவித்துள்ளது.

### பெண்கள் உரிமைகளை மதித்தவர்

'பெரியார் பெண்களின் உரிமைகளை மதித்தவர். பெண்களின் உரிமைகளுக்காக போராடியவர். பெண்கள் மாநாட்டில் தான் பெரியார் என்ற சிறப்புப்பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது.

பல்வேறு நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் பெரியாரின் தத்துவங்களைப்பற்றி ஆய்வு நடத்துகிறார்கள். பெரியார் பற்றி பட்டப்படிப்பு ஆய்வு நடத்தி கலாநிதி பட்டங்களைப் பெற்றுள்ளார்கள்.

### பெரியாரைச் சுற்றி அரசியல் வளருகிறது

இன்று பெரியாரின் கொள்கைகளைத் தமிழக அரசு சட்டமாக்கியுள்ளது. பெரியார் அரசியலைத் தேடி ஓடாவிட்டாலும் தமிழக அரசியல் பெரியாரையே சுற்றி சுற்றி வருகிறது.

தமிழகத்தில் லெனினைப் பற்றி முதலில் வெளியிட்ட பெருமை தந்தை பெரியாரையே சாரும். மற்றும் பேரறிஞர் பேட்ரண்ட் ரஸ்ஸல், இங்கர்சால் போன்றவர்களை தமிழர்களுக்குப் பெரியார்தான் அறிமுகப் படுத்தினார்.

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் தீண்டாமை எதிர்ப்புப் பிரசாரம் நடை பெறுவதாக அறிகிறேன். இங்கும் பெரியாரின் கொள்கைகள் சிந்தனைக் கருவூலங்களை தேவைப்படுகின்றன.

பெரியாரின் கருத்துக்களை நூல்களை ஆங்கிலத்தில் வெளியிடும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இவைகள் முழுமை பெற்றால் பெரியார் உலகத் தலைவராக மதிக்கப் படுவார்.

இவ்வாறு திரு. கி. வீரமணி குறிப்பிட்டார். (அ)

## வேலைவங்கி நேர்முகப்பரீட்சை

(மாவிட்டபுரம்)

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வேலைவங்கி தொடர்பான நேர்முகப்பரீட்சைகள் வெகு துரிதமாக நடைபெறுகின்றன.

வேலைவங்கியில் பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டு அவர்களது தகுதிபற்றி பரிசீலனைசெய்து தெரிவு செய்வதற்காகவே இந்நேர்முகப் பரீட்சை நடைபெறுகிறது.

தினமும் ஏராளமானோர் மேற்படி அலுவலகத்திற்கு வருகிறார்கள். (உ)

# திருமதி காந்தியை விசாரிக்க விசேட நீதிமன்றம் அவசியமில்லை

## ஜனதிபதிக்கு உயர்நீதிமன்றம் ஆலோசனை

புதுடில்லி, செப். 27

இந்திய நெருக்கடிகால அததுமீறல் நடவடிக்கைகள் குறித்து முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மீதும் அவரது சகாக்கள் மீதும் விசாரணை நடத்த விசேட நீதிமன்றங்கள் தேவையில்லை. இப்போதுள்ள உயர்நீதிமன்றங்களிலேயே விசாரணை நடத்தலாமென்று உயர்நீதிமன்றம் இந்தியஜனதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

திருமதி காந்தி மீதும் அவரது சகாக்கள்மீதும் விசாரணை நடத்த விசேட நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென்ற அரசின் முடிவுகுறித்து ஜனதிபதி திரு. நீலன்சஞ்சீவ ரெட்டி உயர்நீதிமன்றத்திடம் ஆலோசனை கேட்டிருந்தார். இதை அடுத்தே மேற் குறிப்பிட்ட ஆலோசனை வழங்கப்பட்டது.

உயா நீதிமன்றத்தில் இந்த வழக்குகளை விசாரணைசெய்யும் பட்சத்தில் வீண்தாமதத்தைப் போக்கி விரைவில் விசாரணைகளை முடித்துவிடமுடியுமென்றும் உயர்நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது. (இ)

# "பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றோர், பழைய மாணவரும் உதவவேண்டும்"

(மாவிட்டபுரம்)

'நமது எதிர்காலச்சந்ததியின் கல்விவிருத்தி பாடசாலைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே பாடசாலைகள் சகல வசதிகளும் கொண்டுவிளங்கினுல்தான் கல்வி சிறப்புற்று விளங்கும். இதற்கு அரசை மட்டும் நம்பியிராது பெற்ருர் ஆசிரியர் சங்கங்கள் பழைய மாணவர் சங்கங்கள் என்பனவும் உதவிசெய்யவேண்டும்.'

இவ்வாறு வீமன்காமம் மகா வித்தியாலய பெற்ருர் ஆசிரியர் சங்க வருடாந்தப்பொதுக்கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது அதற்குத் தலைமைவகித்துப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. க. திருநாவுக்கரசு கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- 'பொதுவாக பொதுச்சேவைக்காக ஆரம்பிக்கப்படும் சங்கங்களில் உண்மையாக இயங்குபவை- இயங்குவதுபோல பாவனை செய்பவை, இயங்காதிருப்பவை என மூவகையானவற்றைக்காண்கிறேம். இவற்றில் உண்மையாக இயங்குபவைதான் நல்ல பலனைத் தோற்றுவிக்கின்றன. பெற்ருர் ஆசிரி

(5-ப் பக்க பார்க்க)

# சமுதாயரீதியில் ஒன்றுபடின்

## பண்பான சமுதாயம் உருவாகும்

### இராஜலிங்கம் எம். பி. பேச்சு

[உடுப்பிட்டி]

'மனிதன் இனத்தாலும், மதங்களாலும், நாடுகளாலும் வேறுபட்டு இருந்தாலும் சமுதாய ரீதியில் இவ்வேறுபாடுகள் இன்றிச் சகலதுறைகளிலும் ஒற்றுமையாகவாழவேண்டும். இன்றேல் பண்பாடுமிக்க நல்ல சமுதாயத்தை உருவாக்கமுடியாது. பாப்பரசர் உலகசமாதானத்திற்கும் அமைதிக்காகவும் தம்மையே தியாகம்செய்யத் தயாராக இருக்கிறூர் என்பதனைக் கருத்திற்கொள்வோம்.'

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு, த. இராஜலிங்கம், கரவெட்டி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெற்ற பாப்பரசர் தினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி பங்குக்கட்டளைக் குரவர் அருட்திரு யோ. அ. டொமினிக் அடிகளார் தலைமையில் தலைமை தாங்கினுர். எம். பி. தொடர்ந்து பேசுகையில். 'முற்காலத்தில் மதத்தின் பெயரால் சண்டைகள்மூண்டு, உலகில் மனிதகுலத்தையே நாசம்செய்ததற்கு வரலாறுகள் சான்றுபகருகின்றன ஆனுல் மனிதநாகரிகம் வளரத்தொடங்கியபோது மதச்சண்டைகள் மறையத்தொடங்கின.

'மனிதநாகரிகத்தைப் பாதுகாப்பதன்மூலம்தான் மதத்தை வளர்க்கமுடியும் என்பதை நன்கு உணர்ந்த மறைந்த பாப்பரசர் அமரர் ஆருவது சின்னப்பர் பாரம்பரியம்மிக்கத்தோலிக்க மதத்தில் பலசீர்திருத்தங்களை மேற்கொண்டார்.

'சிறுபான்மை இனம் என்ற காரணத்திற்காக ஓர் இனத்தின்மீது இன்னெரு இனத்தின்மொழியைப் பலவந்தமாகத் திணிக்கமுடியாது இத்தகைய திணிப்புக்களை நாம் வலிமையாக எதிர்த்தே திருவோம். எமது மொழி, பண்பாடு, கலாச்சாரம் பாதுகாக்கப்படவேண்டும். வேறுமொழிகளை படிப்பதற்கு எமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. ஆனுல் வேறுமொழியைத் திணிப்பதையே எதிர்க்கின்றேம்' என்ருர்.

இவ்விழாவல் யாழ்.எம்.பி. திரு வெ யோகேஸ்வரன், பருத்தித்துறை எம். பி. திரு. கே.துரைரத்தினம், சட்டத்தரணி வ. மகாலிங்கம்,வணபிதா கரவையூர்ச் செல்வம், திரு. தோமஸ் ஈப்பன் ஆகியோரும் பேசினர். திரு. அ. ம, ஜெபரத்தினம் நன்றியுரை கூறினுர்.

விழாமுடிவில் கரவெட்டி திருஇருதயக்கல்லூரி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [உ]

## நிதி ஒதுக்கீடு

(வவனியா)

வவனியா தமிழ் மகா வித்தியாலத்திற்கு மாணவர் விடுதி அமைப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 7500ரூபாவை வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஒதுக்கியுள்ளார். இதைவிட வவனியா மாவட்ட பாடசாலைக்கு தளபாடங்கள் செய்வதற்காகவும் 75,000ரூபாவை ஒதுக்கியுள்ளார். (உ)

## மானி. மகளிர் கல்லூரிக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மகளிர்கல்லூரியின் புதிய கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

இதற்கு சுமார் மூன்றரை லட்சம் ரூபாவரை செலவாகும் எனத் தெரிகிறது.

இக்கட்டட வேலைகள் துரிதமாகவும், சீராகவும் நடைபெறவேண்டுமென்பதில் கல்லூரி அதிபர் திருமதி சச்சிதானந்தம் கவனம் செலுத்திவருகிருர்.

வடஆற்காட்டில்

## வெள்ளத்துக்கு 10 பேர் பலி!

சென்னை, செப். 27

வட ஆற்காட்டில் நேற்று திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கனல் 3 குழந்தைகள் உட்பட 10 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டது.

பலியானேரில் ஆறு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

இவ்வெள்ளப் பெருக்கினல் ஆயிரம குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

காம்ப்டேவிட் முடிவு:

## நீதிமன்றத்தில் தடையுத்தரவுமனு

ஜெரூஸலம், செப். 27

இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள காம்ப்டேவிட் மாநாட்டு திர்மானத்தின் செயற்பாடுகளை உடன் நிறுத்திவைக்குமாறு கோரி இஸ்ரேலிய உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவரே இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். (இ)

## காம்ப்டேவிட் தீர்மானம்: ஜோர்டான் கண்டனம்

அம்மான், செப். 27

மத்திய கிழக்கில் சமாதானத்தைவிரும்புகிறேம், ஆனுல் காம்ப்டேவிட் மாநாடுத்தீர்மானத்தின்மூலம் ஒருதரப்பினருக்கு மட்டும் நன்மை பயக்கக்கூடிய சமாதானததை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இவ்வாறு ஜோர்டான் மன்னர் ஹுசெயின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சிரிய ஜனதிபதி ஜனப் ஆஸாத் துடன் காம்ப்டேவிட் மாநாட்டுத்தீர்மானம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் பத்திரிகைநிருபர்கள் மத்தியில் உரைநிகழ்த்துகையிலேயே மன்னர் ஹுசெயின் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்,

மத்திய கிழக்கு பிரச்னை குறித்து ஜோர்டானும் சிரியாவும் ஒரே கருத்துக்களையே கொண்டுள்ளதாகவும் தெரிவித்த மன்னர், காம்ப்டேவிட் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள யூதகுடியேற்றம், ஜெரூஸலத்தின் எதிர்காலம், கைப்பற்றப்பட்ட அரபுமண் ஆகிய விவகாரங்கள் தொடர்பான கோட்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டுமென்றும் கூறினுர். (இ)

## இலங்கையில் புதிய வங்கிக்கிளை

(கொழும்பு)

பிரான்சின் மிகப்பெரும் வங்கிகளில் ஒன்ருன 'இந்தோ - சுவிஸ்' வங்கி இலங்கையில் கிளை ஒன்றை அமைக்கத் தீர்மானித்துள்ளது.

விரைவில் அமைக்கப்படும் இக்கிளையின் முகாமையாளர் திரு. ஜெரோல் டிபோஸ் இலங்கை வந்துள்ளார். 25 ஆண்டுகளுக்குப்பின் இலங்கையில் அமைக்கப்படும் முதலாவது வெளிநாட்டு வங்கி இதுவாகும்.

ஆரம்பத்தில் ஒருகோடி ரூபா முதலீட்டுடன் ஆரம்பிக்கப்படும் இவ்வங்கி உத்தேச சுதந்திர வாத்தக வலயத்தில் முதலீடுசெய்யும் வெளிநாடுகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். இலங்கையில் ஏற்கனவே 7 வெளிநாட்டு வங்கிகள் உள்ளன, (இ)




அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம். சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள், ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலில் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?





# சேர்கோப்பூர் 36%

களைகளைக் கொல்கிறது

BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தயாளர்;
பேயர்
மேற்கு ஜெர்மனி.

இலங்கையில் தயாரிப்பவர்:
ஹேக்கெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.
P. 9158 R.

**Rio** (Jaffna) Phone: 7607
Daily 4 Swhos
**Born Black**
(Adults Only)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
ஜெய்சங்கர்—ஜெய்சித்திரா
**உங்கள்விருப்பம்**

# கைதடி ஆயுர் ஆஸ்பத்திரி அக். 2-ல் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)
கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி வார்ட் திறப்புவிழா அடுத்த மாதம் 2-ம் திகதி நடைபெறுமென்று இவ் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் என். கந்தையா தெரிவித்தார்.

வார்ட்டில் தங்கிச் சிகிச்சை பெறவிரும்பும் நோயாளர்கள் ஏற்கனவே தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்தார். [அ]

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 4-45, 7-15, 10-00
FURY AT SMUGGLERS BAY

**வின்ஸர்** போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.-முத்துராமன்
ஜெயலலிதா-சோ
நடித்த
**ஒரு தாய் மக்கள்**
(புதிய பிரதி)

(Jaffna) Phone: 360
**REGAL** Daily 4-30, 7-00,& 9-30 p. m.
Glendo Jackson, Oliver Reed in
**THE TRIPLE ECHO**
(Color-adu'ts only)

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயகுமாரி-எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
**சாந்தி**

தினசரி 4 காட்சிகள் 135-வது தினமாக
**ராணி** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) நாகேஷ்...ஜெயபாரதி... முத்துராமன்
(இரு வேடங்கள்) K. பாலசந்தரின்
**அனுபவி ராஜா அனுபவி**
(புதிய பிரதி)
நிதியுதவிக்காட்சி 29-9-78 பி.ப. 2-30
நாகேஷ் நடிக்கும் பாலசந்தரின்
"நீர்க்குமிழி"

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**ஆலயமணி**
(புதியபிரதி)

**லிடோ** போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
**தங்கத்திலே வைரம்**

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி-சாவித்திரி
நடித்த
**கொஞ்சும் சலங்கை**
(ஈஸ்ட்மன்கலர்) [புத்தம் புதிய பிரதி]

இலங்கை தயாரிப்பான ஏமாளிகள் 6-ந் திகதி முதல் திரையிடப்படவிருப்பதால் ரசிகர்கள் ஏமாற்றத்தை தவிர்த்துக்கொள்ள இடத்திற்கு முந்துங்கள்.

**ராஜா** தினசரி 4 காட்சிகள் சிவாஜிகணேசன்
(யாழ்ப்பாணம்) கிரிஜா-கண்ணம்மா
T. R. ராஜகுமாரி S. A. நடராஜன் நடித்த
**மனோகரா** (புத்தம் புதிய பிரதி)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 12-ந் திகதி
வியாழக்கிழமை
(28-9-78)

**மேடம்:-** வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு, புதிய முயற்சிகள் இன்று கைகூடும், செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

**இடபம்:-** நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும், சுற்றுடலில் மதிப்புக்கிடமுண்டு, பெரியோர்களின் ஆதரவு பெருகும்.

**மிதுனம்:-** திருடர் பயத்திற்கு இடமுண்டு, தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும், தொழில் புரியும் இடத்தில் சகதொழிலாளர்களுடன் ஒத்துழைப்பது அவசியம், பொறுமையைப் பேணவும்.

**கடகம்:-** குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், துன்பத்தின் ரேகைகள் படரும், எதற்கெடுத்தாலும் சீறி விழுவீர்கள், கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றம் அடைய நேரிடும்.

**சிங்கம்:-** சுற்றுடலில் செல்வாக்குப் பெருகும், குடும்பத்தில் பிணைப்புகள் பலமடையும், சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

**கன்னி:-** ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம்பெறும், உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும், குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையும், கொடுக்கல் வாங்கல்களை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

**துலாம்:-** எண்ணம் போல் வாழ்வு இன்று மலரும், சமூகத்தில் மதிப்பு உயரும், வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு, சாந்த குணம் சிறப்பைத் தேடித்தரும்.

**விருச்சிகம்:-** உள்ளத்தில் உவகை துள்ளும், நண்பர்கள் உங்களை உற்சாகமாக வரவேற்பார்கள், தேன் சிந்தும் நிகழ்ச்சிகள் நடப்பதுடன் தேடியதும் கிடைக்கும், வெற்றித்தினம்.

**தனுசு:-** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், இன்று அதிகப் பேச்சைத் தவிர்த்துக்கொள்ளவும், அரசியல் வாதிகளாயின் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ளவும்.

**மகரம்:-** வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள், குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம் பெறும்.

**கும்பம்:-** அவசரப் போக்கினால் அதிகாரிகளை பகைத்துக் கொள்வீர்கள், எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும், தவறான வழிமூலம் பணம் பாழாகும், முகமன் கூறுவோரிடத்தில் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**மீனம்:-** ஒளிமயமான எதிர்காலத்திற்கான அறிகுறிகள் தென்படும், புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும், மனதில் புதிய உற்சாகம் பிறக்கும், இல்லத்திலும் இனியவை நடக்கும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

# "நாம் ஆட்சிபீடமேறினால் சிங்களத்திற்கு தனியிடமில்லை"

— றோஹண விஜயவீர

(பொரளை)

"நாம் பதவிக்கு வந்தால் தேசிய மொழியான சிங்கள மொழிச் சட்டத்தை ரத்துச் செய்துவிட்டு யார் எந்த மொழியை எந்த மதத்தை பின்பற்ற விரும்புகிறார்களோ அதற்கு பூரண சுதந்திரத்தை வழங்குவோம்"..

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. றோஹணவிஜயவீர பொரளை கம்பல்பார்க்கில் நடைபெற்ற முன்னணியின் கூட்டத்தில் பேசுகையில் உறுதியளித்தார்.

அவர் இக்கூட்டத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது ஒரு நாட்டிற்கு குறிப்பிட்ட ஒரு மொழியோ, மதமோ, இனமோ கிடையாது. அந்நாட்டில் வாழும் எல்லா இன மக்களுக்கும் மொழியினருக்கும், மதத்தினருக்கும் அந்நாடு உரிமையானது.

### மக்கள் விருப்பம் என்ன?

கடந்தகாலங்களில் சுதந்திரக் கட்சியினரும், ஐக்கியத் தேசியக்கட்சியினரும் மாறி மாறு பதவிக்கு வந்தனர் வந்தவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு தங்கள் எண்ணங்களுக்கமைய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைத்தனர். தாங்கள் அமுலாக்கிய அரசியலமைப்புச் சட்டமே மக்களின் ஜனநாயக உரிமைகளை காப்பாற்றக்கூடியது என்று சொல்லிக் கொண்டார்கள் இதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் தங்கள் அரசியலமைப்புச் சட்டத்தை அமுலாக்கும் முன் எப்படிப்பட்ட அரசை நிர்ணயிப்பார்கள், மக்களின் விருப்பம் என்ன என்பதைப்பற்றி எல்லாம் கேட்கவில்லை. அவர்களின் இஷ்டத்திற்கு அமுலாக்கும் அரசியலமைப்புச் சட்டங்களை ஜனநாயகப் பாதையில் நடைபோடும் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

### ஏதும் சாதித்தது உண்டா?

தொழிலாளர்களின் உண்மைத் தோழன், மார்க்ஸிய கொள்கைகளைக் கைப்பிடிப்பவர்கள் என்று தொழிலாளர் மத்தியில் பிரச்சாரம் செய்யும் திரு. என். எம் பெரேராவும் கொல்வின் ஆர். டி. சில்வாவும், பீட்டர் கெனமனும், தொழிலாளர்களுக்கு உண்மையில் எதைச் செய்திருக்கிறார்கள்? கடந்த அரசாங்கத்தில், சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து வங்கிகளிலிருந்து பல தொழிலாளர்களை வெளியேற்றியதையும் தொழிலாளர்களின் ஓய்வூதியப் பணத்தை நிறுத்தியதையும் அவர்கள் மறந்திருந்தாலும், நாம் இன்னும் மறக்கவில்லை. நாம் யாருடனும் கூட்டுச் சேரமாட்டோம்.

### அறியாமையால் எழும் மோதல்

நமது அரசியல்வாதிகள் தங்களது சுயநலன்களைப் பூர்த்தி செய்ய சிங்களவர்கள், தமிழர்கள் மத்தியில் இனக் கலவரத்தைத் தூண்டுகிறார்கள் சிங்களவர்கள், தமிழர்கள் அறியாமையால் மோதுவதை இவர்கள் வேடிக்கைபார்க்கிறார்கள். எமது கொள்கையில் ஒரு நாட்டிற்கு சொந்தமான மொழியோ, இனமோ, மதமோ கிடையாது. நாம் பதவிக்கு வந்தால் தேசிய மொழியான சிங்கள மொழிச் சட்டத்தை ஒழித்துவிட்டு, யார் எந்த மொழியை, எந்த மதத்தை பின்பற்ற விரும்புகிறார்களோ அதைப் பின்பற்ற பூரண சுதந்திரத்தை வழங்குவோம்

நாங்கள் இங்கேயும் ஒன்றைத்தான் பேசுவோம், அங்கேயும் ஒன்றைத்தான் பேசுவோம், உண்மையான ஜனநாயக சுதந்திரத்தை அமைத்து, புதிய இலங்கையை சட்டியெழுப்ப எம்முடன் இணைய வருமாறு உங்களை அழைக்கிறேன்" என்றார். (உ)

## பெற்றோர்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யர் சங்கங்கள் பெயரளவில் இருக்காது உண்மையாகஇயங்கினால்தான் பாடசாலை வளர்ச்சியடையமுடியும். சுயநலம் கருதாது பொதுநலம் கருதி செயல்படவேண்டும். கல்வி விருத்திக்கு சேவைசெய்வது பெரும் மகத்தானசேவை என நினைத்துப் பணியாற்றவேண்டும்' என்றார். மற்றும் ஆசிரியர் கு. கந்தையா, திரு எஸ் ஆர். ஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

இதையடுத்து நடைபெற்ற நிர்வாகிகள் தெரிவில் தெரிவானோர் வருமாறு:-

தலைவர்: திரு.க. திருநாவுக்கரசு, காரியதரிசி: திரு கு. கந்தையா, உபகாரியதரிசி; திரு சோ. இ. ஞானசுந்தரம், தனாதிகாரி திரு. க. சுப்பிரமணியம்.

11 பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவானது. (உ)

## செந்தமிழர் இயக்க கொழும்புக்கிளை கண்டனம்

(கொழும்பு)

"அரசாங்கத்தினால் உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கில் சிங்களமக்களையும், தெற்கில்தமிழ் மக்களையும் குடியேற்றும் கலப்புக் குடியேற்றம் இலங்கையில் தமிழினத்தின் அழிவுக்கு வழி வகுக்கும்" என்று செந்தமிழர் இயக்கத்தின் கொழும்புக்கிளை கண்டனம் தெரிவித்துள்ளது. இது பற்றி இக்கிளை விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"தமிழர்களைத் தெற்கிலும், சிங்களவரை வடக்கிலும் குடியேற்றுவதன் மூலம் இலங்கையில் ஒற்றுமையை ஏற்படுத்தலாமென்ற ஜனாதிபதியின் கூற்றை எந்த ஒரு தமிழ் மகனும் ஒப்புக்கொள்ளமாட்டான். தனது பாரம்பரிய பிரதேசத்தை இழந்துவிடுகிற எந்தவொரு இனமும் தேசிய இனம் என்னும் தகுதியைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தமிழ் தேசிய இனத்தைச் சிறுபான்மைஇனமாக்கிக் காலப்போக்கில் இல்லாது செய்து தனிச்சிங்களமயமாக்கும். இதுஒருஇனத்துக்குச் செய்யும் அழிவு வேலையாகும். இதனை எம்மைப்போன்ற இடதுசாரி ஜனநாயக சக்திகளும் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது". (ஊ-அ)

லம்பேட்

## ஆயர்மாநாட்டில் இலங்கை ஆயர்

[அரியாலை]

லம்பேட் நாட்டில் நடைபெற்ற அகில உலக அங்கிலிக்கன் திருச்சபைகளின் ஆயர்களின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக லம்பேட் நாட்டுக்குச் சென்ற கொழும்பு அத்தியட்சாதீன ஆயர் அதிவணக்கத்திற்குரிய ஸ்வின் பெர்னாண்டோ ஆண்டகை இவ்வாரக்கடைசிப் பகுதியில் நாடு திரும்பவிருக்கிறார்.

இம்மகாநாடு பத்துவருடங்களுக்கொருமுறைலம்பேட் நாட்டில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. [ச]

## சுயநிர்ணய உரிமை பற்றிய

# போபகே கூற்று: வி.பி. விளக்கம்

[யாழ்ப்பாணம்]

சுயநிர்ணய உரிமைஎன்னும் உயர்ந்த கோட்பாடு என்னிடமிருந்து மக்கள் விடுதலைமுன்னணியோ அன்றி அவர்களிடமிருந்துநானேஅறிந்துகொள்ளவேண்டிய ஒன்றல்ல. ஆனல்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மக்கள் விடுதலை முன்னணியினர் ஏற்றுக்கொண்ட பின்னரே நான் அவர்களுடன் தொடர்பு கொண்டேன். எனவே நான் அவர்களைச் சந்தித்தபின்னரே அவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்டனர் என நான் பிரசாரம்செய்து வருவதாக திரு. லயனல் போபகே யாழ்.நகர் கூட்டத்தில் கூறியது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.

இவ்வாறு செந்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு வி. பொன்னம்பலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

திரு வி. பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:-

'ஈழநாடு 26-9-78 இதழில் 'எங்களை அவர் சந்திததபடியால்தான், நாங்கள் தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக திரு.வி. பி. பிரசாரம் செய்துவருகிறார்' என்று திரு போபகே யாழ் நகர்கூட்டத்தில் கூறியதாக வெளிவந்தசெய்தியைப் பார்த்துஆச்சரியப்பட்டேன்.

இக்கூற்று உண்மைக்கு முற்றிலும் முரணானதாகும்.

நான் அவ்விதம் என்றுமே கூறியதில்லை யாரோ-பொறுப்பற்றவர்கள் தந்த தகவலின் அடிப்படையில் பேசியுள்ளமை குறித்து நான் வருந்துகிறேன்.

மேலும் சுயநிர்ணய உரிமை பற்றிய மக்கள்விடுதலை முன்னணியின் கருத்தை நான் அறிந்து கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த போதே வரவேற்றுப்பாராட்டியுள்ளேன். அத்துடன் தமிழரின் சுயநிர்ணய உரிமையை கௌரவித்துநிற்கும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள இயக்கங்களுள் திரு விஜயவீராவின் தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணி முன்னிற்பதைப் பலமுறை பாராட்டி பேசியுள்ளேன்.

இத்தகைய பாராட்டுதல்களைத் தெரிவித்து பல மாத காலங்கள்சென்றபின்பே நான் அவர்களை முதற்தடவையாகச் சந்தித்தேன். எனவே தமிழரின் சுய நிர்ணய உரிமையை அவர்களை நான் சந்தித்த பின்பே அவர்கள் ஏற்றதாக எவ்வாறு நான் கூறியிருக்க முடியும்? உண்மையில் தமிழரின் சுய நிர்ணய உரிமையை ஏற்கனவே ஏற்றுவிட்ட காரணத்தால்தான் அவர்களை நான் சந்தித்தேன்,

பொதுவுடைமைத் தந்தை மார்க்சும், உலகின் முதலாவது பாட்டாளிவர்க்க அரசமைத்து பல இனங்களின் உரிமை காத்த மாமேதை லெனினும் 19 ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலும் 20 ம் நூற்றுண்டின் ஆரம்பப்பகுதியிலும் ஒரு தேசிய இனத்தின் உரிமை காக்க சுய நிர்ணய உரிமையே வழியென்று கொள்கையாக உருவாக்கி உலகறிய நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

இலங்கையிலுள்ள மார்க்ஸிச - லெனினிசவாதிகளோ, பேரினவாத நிர்ப்பந்தத்திற்கு அடிபணிந்து, முன்பு மறுத்து, தயங்கிப்பின் தாமதித்து ஏற்று, தமிழரின் சுயநிர்ணய உரிமையை அரை மனதுடன் அங்கீகரிக்க முன்வருவது வேகனைக்குரியதாகும். (இ)

## உப-தபாலதிபர் சங்கக் கூட்டம்

(வவனியா)

அகில இலங்கை தமிழ் பேசும் உபதபால் அதிபர்களின் தொழிற்சங்க வவனியா கிளையின் வருடாந்த பொதுக்கூட்டம் வவனியா மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிளிநொச்சி தபால் தந்தி அத்தியட்சகர் திரு. மகேஸ்வரன் ஆய்வுப்பரிசோதகர் திரு. சிவயோகசுந்தரம் தாய்ச்சங்க செயலாளர் திரு ஜெ.எஸ்.நடராஜா ஆகியோர் கலந்து கொண்டனர் உப-தபால் அதிபர்களுக்கு சகயா நிதிப்பணம் வழங்குவதற்கு இவ் அரசாங்கம் இணங்கியதற்காக மறைந்த அமைச்சருக்கு நன்றி தெரிவித்ததுடன் அவரின் மறைவுக்காக அஞ்சலியும் செலுத்தப்பட்டது. உபதபால் அதிபர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் பெறுதற்கு சங்கம் தொடர்ந்துபோராடவேண்டும் என்றும்தீர்மானிக்கப்பட்டது

இவ்வருடத்துக்குரிய நிர்வாக உத்தியோகத்தர்தெரிவு பின்வருமாறு தலைவர் திரு. எஸ். தேவதாஸ் செயலாளர் பி. யோகநாதன் பொருளாளர் திருமதி கே. கந்தசாமி உபகாரியதரிசி வி. குணரத்தினம் நிர்வாகசபை உறுப்பினராக ஐவர் தெரிவாகினர்

## மேலும் பல வாலிபர்கள் மீது விசாரணை

(கரணவாய்)

பருத்தித்துறை வர்த்தகர் ஒருவரின் பருவ மகளைப் பணயமாகவைத்து, பணம் பெற முயன்ற சம்பவம் தொடர்பாக மேலும் சில வாலிபர்கள் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு, றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள இரு இளைஞர்களையும் விசாரணைசெய்ததையடுத்தே மேலும் சில வாலிபர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரமோகன் (வயது 21), உதயகுமார் (வயது 15) ஆகிய இருவரும் இம்மாதம் 29ந் திகதி, பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவிருக்கின்றனர்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிச் சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களும் இம்மாதம் 29ந் திகதி பருத்தித்துறை நீதிபதி முன்னிலையில் ஆஜர்செய்யப் படுவர். (அ)

## கலாபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெக்டர் பத்மநாதன் கொலையில், கலாபதி வேண்டுமென்றே சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளார்.

"பத்மநாதன் கொலை தொடர்பாக இவ்வருடம் ஜூன் மாதம் ஏழாந் திகதி நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் கலாபதி, எவராலும் அடையாளம் காணப்படவில்லை. அவ்வாறிருந்தும், கலாபதி தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறர். கைதுசெய்வதற்கும் விளக்கமறியலில் வைத்திருப்பதற்கும் எந்தவொரு சாட்சியமும் கலாபதிக்கு எதிராகக் கிடையாது."

—இவ்வாறு பிணை மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### துரையப்பா வழக்கு

1975-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் திகதி யாழ். மேயர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா பொன்னலையில் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் (1) பாலசுப்பிரமணியம் கலாபதி, (2) வி. ஏ. கிருபாகரன், (3) எஸ். லோகநாதன். (4) வி. சிறீதரன், (5) ரி. சந்ததியார் ஆகிய ஐவரும் கைதுசெய்யப்பட்டு, இவர்கள்மீது கொலை, கொலைமுயற்சி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

துரையப்பா கொலைவழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு, ஜே. எப். ஏ. ஸோசா முன்னிலையில் இவ்வருடம் ஜூன் மாதம் மூன்றும் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. கொழும்பு ஹல்ஸ்டோர்ப்பில் உள்ள உயர்நீதிமன்றக் கட்டிடத்தில் மேல்நீதிமன்ற நீதிபதி விசாரணைசெய்தார்.

### முதல் எதிரி

இக்கொலைவழக்கில் கலாபதி முதல்எதிரி. வடாகுதி வன்செயல்கள் தொடர்பாக அப்பொழுது விளக்கமறியலில் இருந்த கலாபதி, துரையப்பா கொலைவழக்கு தொடர்பான விசாரணைக்கு ஆஜர்செய்யப் படவேண்டும என்று சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

துரையப்பா கொலைவழக்கில் சம்பந்தப்பட்ட நான்கு எதிரிகள் இவ்வருடம் ஜூலை மாதம் 12-ந் திகதி விடுதலை செய்யபட்டனர். எஞ்சியிருந்த ஒரேயொரு எதிரியான கலாபதி, இவ்வருடம் ஜூலை மாதம் 17ம் திகதி விடுதலை செய்யப்பட்டார்.

### விடுதலை பெற்றும்...

கலாபதி இந்த வழக்கில் விடுதலை செய்யப்பட்டபோதிலும் அவர் மற்றெரு (இன்ஸ்பெக்டர் பத்மநாதன்) கொலை சம்பந்தமாக, சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் இருப்பதால், விடுதலைத் தீர்ப்புக் கிடைத்தவுடன மீண்டும் றிமாண்ட் சிறைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கலாபதி தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். (ம)

## யாழ். நகரில் நாளை சீன தேசியதின விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் சீனக் குடியரசின் 29வது தேசிய தினத்தை யொட்டி, இலங்கை-சீன நட்புறவுச் சங்க யாழ். கிளை நாளை பிற்பகல் 5 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நட்புறவுச் சங்க யாழ். கிளைத் தலைவர் திரு. ஞா. ஸ்ரீமனோகரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில், அண்மையில் சீன சென்று திரும்பிய இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. க. கைலாசபதி சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். மேலும் இக்கூட்டத்தில் திருவாளர்கள் கே.செந்திவேல், நிகால் டயஸ், ஏ. எம். கமால், எஸ். வேலாயுதம், சட்டத்தரணி எஸ். தேவராஜா ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

கூட்ட இறுதியில் சீனத் திரைப்படம் காண்பிக்கப் படும். (அ)

## கடலூர்...

(1-ம பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினர். சில நிமிடங்கள் இங்கு ஈழத் தமிழர்களின் அரசியல் நிலை பற்றி ஆராய்ந்த பின்னர் தந்தை செல்வா சமாதிக்குச் சென்று அங்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். பின்னர் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்தவர்களின் நினைவுத் தூபிகளை அவர் பார்வையிட்டார்.

திரு. வீரமணியுடன் திராவிட கழக தொண்டரான திரு. கணேசனும் அவரது பாரியாரும் வந்திருந்தனா.

இன்று காலை சாவகச்சேரியில் நடைபெறும் ஒரு கூட்டத்திலும் வீரமணி உரை நிகழ்த்துவார். பின்னர் யாழ்ப்பாணம் வளாகத்திலும் உரைநிகழ்த்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

திரு வீரமணி இன்று மத்தியானமே கொழும்பு திரும்பவுள்ளார். திரு. கணேசனும் அவருடைய பாரியாரும் ஒரு கிழமை யாழ்ப்பாணத்தில் தங்கி இருப்பார்கள், (கெ.கூ)

## அகில இலங்கை உதைபந்தாட்ட சாம்பியன் மகாஜன

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

'சிங்கர்' வெற்றிக் கேடயத்திற்காக நடைபெற்ற இச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கந்தானை டி மெஷனட் கல்லூரியை 1—0 கோலால் வெற்றியீட்டி சாம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட மேற்படிக் கேடயத்துக்கான இச்சுற்றுப் போட்டியில் சாம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக் கொண்ட முதலாவது வடபகுதி பாடசாலை மகாஜனக் கல்லூரி என்பது பாராட்டுக்குரியது.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற இப்போட்டி, ஆரம்ப முதல் இறுதிவரை விறுவிறுப்பாகவே இருந்தது. ஆட்டம் ஆரம்பித்து 17-வது நிமிடத்தின்பின் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த சிறிபிரகாஷ், சாம்பியன் பட்டத்துக்கான கோலை அடித்து கல்லூரிக்கு பெருமையைத் தேடித்தந்தார். (இ)

## மணல் பறிக்கக் கூறுவிலை

தந்தை செல்வா நினைவாலயக் கட்டடம் அமைந்துள்ள பள்ளக்காணியை நிரப்புவதற்கு மண்கும்பான், அரியாலை அல்லது காக்கை தீவில் இருந்து ஐநூறு கனஅடி (500 கியூப்) மணல் தேவைப்படுகின்றது. மழைகாலத்துக்கு முன் பறிக்கப்படவேண்டி இருப்பதால் லாரி, உழவுயந்திரம் வைத்திருப்பவர்கள் ஒரு கனஅடி (கியூப்) மணல் நினைவாலய வளவிற்குள் பறிக்கக் கூறுவிலைகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அக்டோபர் 7-ம் நாளுக்கு முன் அனுப்பிவைக்கவும்.

தந்தை செல்வா நினைவு
அறங்காவல் குழு,
20, சோமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.

## மரண அறிவித்தல்

### கதிர்காமு இராசரத்தினம்

கதிர்காமு இராசரத்தினம் காலமானர். இவர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை ஆசிரியை நளாயினியின் கணவரும், உரும்பராய் காலஞ்சென்ற கதிர்காமுவின் மகனும், திருமதி இளையம்மா மதியாபரணத்தின் மருமகனும், யாழ்ப்பாணம் S. H. S. கந்தோரில் வேலைசெய்தவரும், தனபாலசிங்கம், சீவரத்தினம், சிவபாதசேகரம் (ஆசிரியர் உரும்பராய் இந்துக் கல்லூரி), பற்குணநாதன் (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, கொழும்புத்துறை), விமலநாதன் (யாழ்ப்பாணம் தபாற்கந்தோர்), சிவபாக்கியம், யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராசா, கமலாதேவி, விவேகானந்தன், பவானந்தன் (யாழ். மத்திய கல்லூரி), டாக்டர் சிறீதரன், சர்வானந்தன், கிருஷ்ணனந்தன், சிறீதேவி, சியமளாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமைககிரியைகள் இன்று (28-9-78) வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் உரும்பராயில் நடைபெறும்.

சு. பார்த்திபன்,
"தமிழகம்"
உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

0445